# கருவலகஸ்வெவ பிரதேச சபை
# புத்தளம் மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 17 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 10 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களின் மூலம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கருவலகஸ்வெவ பிரதேச சபையின் நிதி நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசோட்டத்தையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஸாலியவெவ சந்தைப் பகுதியிலிருந்து அகற்றப்பட்ட கட்டிடப் பொருட்களின் பெறுமதியும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிணைப்புக் கல் உற்பத்தியின் மிகுதி இருப்பு மீதியான ரூபா 249,764 பெறுமதி நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது 4 சந்தர்ப்பங்களில் மூலதனத் தன்மையிலான செலவினங்களான ரூபா 328,268 தொகை மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(இ) ரூபா 309,996 தொகையான பூர்த்தியடைந்த வேலைப் பெறுமதிகொண்ட கற்கட்டிகளின் தொழிற்சாலை ரூபா 399,996 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 90,000 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 338,900 பெறுமதியான RW -8952 ஆம் இலக்க ட்ரேலரின் பெறுமதி ரூபா 200,000 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் மோட்டார் வாகன மற்றும் வண்டிகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 138,900 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) நிலுவையான நீர் வரி மீதித் தொகையான ரூபா 139,780 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் மீளாய்வாண்டின் மிகை மற்றும் வருமானக் கடன்பட்டோர் அதே பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) நிதிக்கூற்றுக்களில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி விளக்கு உபகரணங்களின் மீதி ரூபா 14,642 தொகையும், பிணைப்புக் கற்களின் விற்பனையால் பெறப்பட வேண்டிய தொகையான ரூபா 32,980 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் களஞ்சிய இருப்பு மீதி ரூபா 6,484 தொகையும் நிலுவையான குழாய்க் கிணறுகளின் கட்டணமான ரூபா 230,253 தொகையும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 பெறவேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16,622,489 தொகையானதுடன் இதில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 82,376 ஆகக் காணப்பட்டது.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12,876,269 தொகையானதுடன் இதில் 01 வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,950,605 ஆகக் காணப்பட்டது

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 32,594,779 தொகையான கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,245,205 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,146,077 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கான வருமானச் சேகரிப்பின் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 200 | 149 | 51 |
| (ii) | வாடகை | 634 | 631 | 3 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 595 | 521 | 74 |
| (iv) | சேவைக்கான கட்டணம் | 657 | 1,163 | (506) |
| (v) | ஆணைச்சீட்டுக் கட்டணம் மற்றும் தண்டப்பணம் | 3,530 | 1,463 | 2,067 |
| (vi) | ஏனைய வருமானம் | 1,078 | 112 | 966 |

## 2.3 முத்திரைக் கட்டணம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணத் தொகை கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிராததுடன் ஆண்டிற்கான உள்ளக பற்றுச்சீட்டிடல் ரூபா 793,000 ஆகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயற்திறன் மதிப்பீடு

2013 ஆம் ஆண்டின் போது வடமேல் மாகாண வபை திணைக்களத்தின் மூலம் உள்ளூராட்சி நிறுவகங்களுக்கிடையே மேற்கொள்ளப்பட்டிருந்த செயலாற்றல் மதிப்பீட்டின் படி நூலக, முன்பள்ளி, கைத்தொழில் மற்றும் தரவு முறைமை எனும் பிரிவுகளில் மாத்திரம் முன்னேற்றம் காண்பிக்கும் வகையில் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் ஆயுர்வேத, வாராந்த சந்தை மற்றும் கழிவுப்பொருட்கள், வருடாந்தத் திட்டங்கள், சிறுவர் கற்பிப்பு மற்றும் நகர சுத்திகரிப்பு போன்ற ஏனைய பிரிவுகளிலும் முன்னேற்றம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டிற்கான செயற்திறன் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இப்பலோகம நீர்ச் செயற்திட்டத்திற்காக நீர்க்குழாய் உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய நீர் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுவதற்காக ரூபா 57,765 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் உரிய கொள்வனவுகள் விலைக்கோரல்கள் இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) இப்பலோகம நீர்ச் செயற்திட்டம் தொடர்பான பதிவேட்டை நாளதுவரையாகப் பேணியிராமையால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையான நீர் வரி மீதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் 07 வாகனங்களுக்காக 2014 ஆம் ஆண்டின் போது 8606 லீற்றர் எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதற்காக ரூபா 1,089,513 தொகை செலவிடப்பட்டிருந்தது. சபையின் எரிபொருளுக்காகச் செலவிடப்பட்ட தொகை மொத்த மீண்டெழும் செலவினத்தின் 6 சதவீதமாகக் காணப்பட்டது.

## 3.3 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) WP LE -7454 ஆம் இலக்க மஹேன்திரா தனி கப் வண்டி, இல. 49 – 2271 மற்றும் 46 – 5800 ஆம் இலக்க உழவு இயந்திரம் மற்றும் டிரேலர் மற்றும் இ7. 49 – 1999 ஆம் இலக்க நான்கு சக்கர மினி உழவு இயந்திரம் நீண்ட காலமாக விளைவற்று சூழலில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பழுதுபார்க்கப்படுவதற்கோ அல்லது கைதவிர்க்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை வளாகத்திலுள்ள எழுதுவினைஞர் உத்தியோகபூர்வ விடுதி எவ்வித பயன்பாட்டிற்கும் எடுத்துக்கொள்ளப்படாது நீண்டகாலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

## 3.4 ஒப்பந்த நிர்வாகம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 17 ஆம் தூண் சாகினி குளத்தின் பிணைப்புக் கல் பதிக்கப்பட்ட வீதியின் நடவடிக்கைகள் ரூபா 444,781 தொகையான பூர்த்திசெய்யப்பட்ட வேலைப் பெறுமதியுடன் 2013 திசெம்பர் 07 ஆம் திகதி பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. 2014 சனவரி 30 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கள கணக்காய்வுப் பரிசோதனை வரையிலும் அவ் வீதியின் முன்பதாகக் காணப்பட்ட கொங்கிரீட் அணையும், வீதியின் முடிவில் இடப்பட்டிருந்த கொங்கிரீட் அணை மற்றும் வீதியின் இடப்பகுதியிலிடப்பட்டிருந்த கொங்கிரீட் அணையும் வெடித்துக் காணப்பட்டிருந்தது. மேலும், வீதியின் தொடக்கத்தில் ஆங்காங்கே கற்கள் பதிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 449,961 தொகையான பூர்த்திசெய்யப்பட்ட வேலைப் பெறுமதியான 2013 நவம்பர் 19 ஆம் திகதி வேலை பூர்த்திசெய்யப்பட்டிருந்த வித்யா சக்கரவர்த்தி பாடசாலை வீதியின் இரு மருங்கிலும் சல்லிக் கற்கள் இடப்பட்டு இறுக்கப்பட்டிராமை 2014 சனவரி 30 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட களக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இவ்வாறே, வீதியின் முன்பாக நிர்மாணிக்கப்பட்டிருந்த கொங்கிரீட் அணையும் உடைந்திருந்தது.

(இ) மகநெகும நிதியத்தின் ஏற்பாட்டில் ரூபா 443,583 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கலவெவ பாடசாலைக்கருகாமையில் ராஜாங்கனை யாய 06 வீதி வரையுள்ள பிணைப்புக் கல் பதிக்கப்பட்ட வீதி 2014 சனவரி 30 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட களக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வீதியின் முடிவு மற்றும் ஆரம்பத்தில் கொங்கிரீட் அணை உடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ் வீதியில் 279 அடி நீளத்தில் வீதியின் இரு மருங்கிலும் தாங்கும் அணைகள் கட்டப்பட்டிருந்தன. பின்னர்

திட்டம் மாற்றப்பட்டு வீதியின் முன்புறம் விஸ்தரிக்கப்பட்டதன் காரணமாக வீதியின் தொடக்கத்திலிருந்து 279 அடி நீளம் வரை தாங்கும் அணை கொங்கிரீட் இடப்பட்டிருந்த போதிலும் இதில் 46 அடி அளவு எதுவுமற்றுக் காணப்பட்டது. இதன் படி மதிப்பீட்டின் படி, வேலை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிணைப்புக் கல் பதிக்கப்பட்ட சகல வீதிகளிலும் வீதியின் இரு மருங்கிலும் ஆங்காங்கே பதிப்புக் கற்கள் பதிக்கப்பட்டிராத 3.5 அங்குல அளவு வரிக்கு கற்களின் துகள் இடப்பட்டு மூடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) ஒப்பந்தக் கட்டுப்பாடு
(ஈ) வாகனக் கட்டுப்பாடு